



# போக்குவரத்துத் துறை

## மானியக் கோரிக்கை எண். 48

**********

## இயக்கூர்திகள் சட்டங்கள் - நிருவாகம்

## மானியக் கோரிக்கை எண். 25



**அறிவிப்புகள் 2022 - 2023**

# போக்குவரத்துத் துறை

மானியக் கோரிக்கை எண். 48

**********

## இயக்கூர்திகள் சட்டங்கள் - நிருவாகம்

மானியக் கோரிக்கை எண். 25

அறிவிப்புகள்

2022 - 2023

**சா.சி. சிவசங்கர்**

போக்குவரத்துத் துறை அமைச்சர்

# போக்குவரத்துத் துறை

## 1) தானியங்கி பயணச்சீட்டு வழங்கும் முறை / பண பரிவர்த்தனையற்ற பயணச்சீட்டு முறையினை அறிமுகப்படுத்துதல்.

மாநகர போக்குவரத்துக் கழகம், சென்னை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர் ஆகிய மூன்று கழகங்களின் அனைத்து பேருந்துகளுக்கும் தேசிய பொது பயன்பாட்டு அட்டையுடன் அனைத்து பொது போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைக்கும் வகையில் தானியங்கி பயணச்சீட்டு வழங்கும் முறை / பண பரிவர்த்தனையற்ற பயணச்சீட்டு முறையினை, ரூ.70 கோடி செலவில் KfW ஜெர்மனி மேம்பாட்டு வங்கியின் நிதியுதவியுடன் அறிமுகப்படுத்தப்படும்.

## 2) பயண கட்டணச் சலுகை அனுமதி சீட்டுகளை வலைதளம் வாயிலாக வழங்குதல்.

பயண கட்டணச் சலுகை பெறுபவர்கள் (மாற்றுத்திறனாளிகள், புற்றுநோயாளிகள் மற்றும் இதர) பயண கட்டணச் சலுகை அனுமதிச் சீட்டுகளை பெறுவதற்கு (100% இலவசம், 75%, 50%, மூன்றில் ஒரு பங்கு, இலவச வில்லை (Free Token) போன்றவை) அரசுப் போக்குவரத்து கழகங்களின் பயணச்சீட்டு வழங்கும் இடங்களுக்கு /பணிமனைகளுக்குச் செல்கின்றனர்.

பயணச் சீட்டுகள் பெறுவதற்காக பயணம் மேற்கொள்வதை குறைக்கவும், எளிதாகவும், வசதியானதாகவும் பயணச் சீட்டுகள் பெறுவதற்கு அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் வலைதளம் (web portal) அல்லது இ.சேவை மையம் வாயிலாக இணையதள பயணச்சீட்டு வழங்கும் ஏற்பாட்டுமுறை அறிமுகப்படுத்தப்படும்.



## 3) சென்னை, திருச்சி மற்றும் விழுப்புரத்தில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகளை நவீனமயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல்.

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையானது மாநிலம் முழுவதும் இயங்கும் அரசுத் துறை வாகனங்களை பராமரித்து வருகிறது. பழுதுபார்க்கும் பணியின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், பழுது நீக்கும் நேரத்தை குறைப்பதற்காகவும், அதற்குத் தேவையான சிறப்பு கருவிகள் மற்றும் சாதனங்களை நிறுவுவதன் வாயிலாக சென்னை, திருச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படும் அரசு தானியங்கி பணிமனைகளை நவீனமயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ. 70.73 இலட்சம் செலவிடப்படும்.

4) அரசு தானியங்கி பணிமனைகள் இல்லாத இடங்களில் அரசுத் துறை வாகனங்களை ஆய்வு செய்வதற்காகவும் பராமரிப்பதற்காகவும் " அரசு நடமாடும் பணிமனைகளை " உருவாக்குதல்.

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் 20 பணிமனைகள் மட்டுமே பல்வேறு மாவட்ட தலைமையிடங்களில் செயல்பட்டு வருகின்றன. அரசு தானியங்கி பணிமனைகள் இல்லாத பிற மாவட்டங்கள் மற்றும் பிற இடங்களில் இயங்கி வரும் அரசுத் துறை வாகனங்களை பழுது நீக்கும் பொருட்டு அருகிலுள்ள அரசு தானியங்கி பணிமனைகளுக்கு அவை கொண்டு செல்லப்படுகின்றன. இதற்காக அவ்வாகனங்கள் நீண்ட தொலைவு பயணிக்க வேண்டியுள்ளதால் கூடுதல் எரிபொருள் செலவு மற்றும் காலதாமதம் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் வகையில், ரூ.1.36 கோடி செலவில், நடமாடும் பணிமனைகள் "



(Mobile Workshops) மதுரை, திண்டுக்கல், தருமபுரி, காஞ்சிபுரம், வேலூர், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு இடங்களில் அமைக்கப்படும். இதனால், அருகிலுள்ள கிருஷ்ணகிரி, தேனி, கரூர், திருவள்ளூர், செங்கல்பட்டு திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், நாமக்கல் மற்றும் தென்காசி ஆகிய 10 மாவட்டங்கள் பயன்பெறும்.

## 5) அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஒருங்கிணைந்த பயணிகள் குறை தீர்க்கும் உதவி மையம்.

பேருந்து பயணிகளின் நலனுக்காக, குரல் அழைப்புகள் மூலம் புகார்களைப் பெறவும், அவற்றிற்கு தீர்வு காணவும் அனைத்து அரசு போக்குவரத்து கழகங்களுக்கும், ஒருங்கிணைந்த பயணிகள் குறை தீர்க்கும் உதவி மையம் உருவாக்கப்படும். இதன்மூலம் உரிய போக்குவரத்துக் கழகங்களால் பயணிகள் குறைகள் மற்றும் புகார்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்படும்.



## 6) பேருந்து முனையங்களில் இணையவழி பயணியர் தகவல் ஏற்பாட்டு முறை.

பயணம் செய்யும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் (ரூ.3 கோடி செலவில் KfW ஜெர்மனி மேம்பாட்டு வங்கியின் நிதியுதவியுடன்) பேருந்துகளின் வருகை, புறப்பாடு குறித்த நிகழ்நேரத் தகவல்கள் மதுரை மற்றும் கோவை நகரங்களில் மொத்தம் 16 பேருந்து முனையங்களில் இணையவழி தகவல் அமைப்பு மூலமாக காட்சிப்படுத்தப்படும்.

## 7) தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின் பயணச்சுமைப் பெட்டிகளை வாடகைக்கு விடுதல்.

தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் நீண்ட தூர பயணத்திற்கும் ஆந்திரா, கேரளா மற்றும் கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களுக்கும் மற்றும் யூனியன் பிரதேசமான புதுச்சேரிக்கும் பேருந்துகளை இயக்கி வருகிறது. தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் பக்கவாட்டுகளில் 3 பயணச்சுமைப் பெட்டிகள் உள்ளன. அவற்றில், 2 பயணச்சுமை பெட்டிகள் மட்டுமே பயணியர்களின் பொருட்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன. பொது மக்களுக்கு உதவவும், தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின் வருவாயை அதிகரிக்கவும் பயணச்சுமை பெட்டியில் மீதமுள்ள இடத்தை சோதனை அடிப்படையில் சென்னை, திருச்சி மற்றும் மதுரை போன்ற இடங்களுக்கு மாதாந்திர அல்லது தினசரி வாடகை அடிப்படையில், பயணம் செய்யாத நபர்களின் சிப்பம் (Parcel) / மற்றும் தூதஞ்சல் (Courier) அனுப்பப் பயன்படுத்தப்படும்.



## 8) இணையவழிப் பயணச்சீட்டு முன்பதிவு வாயிலாக இருவழிப் பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்யும் பயணிகளுக்கான கட்டணச் சலுகை.

பயணிகள் நீண்ட தூரப் பேருந்துகளில் பயணிப்பதை ஊக்குவிக்கவும், தனியார் பேருந்துகள், இரயில் போன்றவற்றில் பயணிக்கும் பயணிகளை ஈர்க்கவும், விழா நாட்கள் நீங்கலாக இதர நாட்களில், இணையவழிப் பயணச்சீட்டு முன்பதிவு வாயிலாக இருவழிப் பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு 10% தள்ளுபடி வழங்கப்படும்.

## 9) 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணமில்லா பயணம் செயல்படுத்துதல்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் அனைத்து வகை பேருந்துகளிலும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இலவசமாகப் பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள். (தற்போது, 3 முதல் 12 வயது வரையிலான குழந்தைகளுக்கு அரை கட்டணத்தில் பயணச்சீட்டு வழங்கப்படுகிறது.)



## 10) திருச்சிராப்பள்ளி, விருதுநகர் மற்றும் இராமநாதபுரத்தில் அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஓட்டுநர் பயிற்சி மையம் அமைத்தல்.

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் மூலமாக, திருச்சிராப்பள்ளி, விருதுநகர் மற்றும் இராமநாதபுரத்தில் தனியார் துறை நிறுவனங்களுடன் இணைந்து பொது தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership mode) சாலை பாதுகாப்பினை கருத்தில் கொண்டு விபத்துக்களை குறைக்கும் பொருட்டு, ஓட்டுநர் பயிற்சி தடம் மற்றும் அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஓட்டுநர் பயிற்சி மையம் அமைக்கப்படும்.

திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்படும் ஓட்டுநர் பயிற்சி மையத்தில், பொதுமக்களுக்கு ஓட்டுநர் பயிற்சியும், அரசுத் துறை மற்றும் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் அளிக்கப்படும்.

வேலை வாய்ப்பிற்காக காத்திருக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு விருதுநகர் மற்றும் இராமநாதபுரத்தில் ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படும். இதன்மூலம் நன்கு பயிற்சி பெற்ற ஓட்டுநர்கள் உருவாவதால் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறையும்.



# இயக்கவூர்திகள் சட்டங்கள் - நிருவாகம்

11) பொதுமக்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு நேரடியாக வராமலேயே ஓட்டுநர் உரிமத்தில் வாகன வகையினை ஒப்புவிப்பு செய்தல், போக்குவரத்து அல்லாத வாகன உரிமை மாற்றத்தினை தெரிவித்தல் மற்றும் பதிவுச் சான்றில் தவணைக் கொள்முதல் விவரத்தினை மேற்குறிப்பு செய்தல் ஆகிய சேவைகளை கணினி வழியாகப் பெறுதல்.

போக்குவரத்துத் துறையில் பொதுமக்கள் ஆதார் அடையாள அட்டையை பயன்படுத்தி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினை நேரடியாக அணுகாமல் கீழ்க்கண்ட சேவைகளை கணினி வழியாகப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அ) ஓட்டுநர் உரிமத்தில் ஏதேனும் வாகன வகையினை ஒப்புவிப்பு செய்தல்.

ஆ) போக்குவரத்து அல்லாத வாகன உரிமை மாற்றத்தினை இணையத்தில் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு தெரிவித்தல்.

இ) பதிவுச் சான்றில் தவணைக் கொள்முதல் விவரத்தினை மேற்குறிப்பு செய்தல்.

## 12) பள்ளி வாகனங்களுக்கு முன்புறம் மற்றும் பின்புறம் கேமராவுடன், சென்சார் கருவி பொருத்துதல்.

பள்ளி வாகனங்களுக்கு முன்புறம் மற்றும் பின்புறம் கேமராவுடன் சென்சார் கருவி பொருத்துவதற்கு ஏதுவாக தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளி வாகனங்கள் ஒழுங்கு முறை மற்றும் கட்டுப்பாடு) சிறப்பு விதிகள், 2012-ல் திருத்தம் மேற்கொள்ளப்படும்.



## 13) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் (பகுதி அலுவலகம்) உருவாக்குதல்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தினை பிரித்து கமுதி, கடலாடி மற்றும் முதுகுளத்தூர் ஆகிய வட்டங்களை உள்ளடக்கிய முதுகுளத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் (பகுதி அலுவலகம்) உருவாக்கப்படும்.

14) திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் (பகுதி அலுவலகம்) உருவாக்குதல்.

திண்டுக்கல் மாவட்டத்தில், கொடைக்கானல் வட்டத்தினை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் (பகுதி அலுவலகம்) உருவாக்கப்படும்.



15) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தினை (பகுதி அலுவலகம்) வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக தரம் உயர்த்துதல்.

சிவகங்கை வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டில் உள்ள சிங்கம்புணரி மற்றும் திருப்பத்தூர் வட்டங்களை பிரித்து காரைக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக எல்லைக்குள் உள்ள காரைக்குடி மற்றும் தேவக்கோட்டை வட்டங்களுடன் சேர்த்து காரைக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் (பகுதி அலுவலகம்) வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக தரம் உயர்த்தப்படும்.

**சா.சி. சிவசங்கர்**
போக்குவரத்துத் துறை அமைச்சர்